# SRCAS Pulse
An IQAC Initiative

@SRCASOfficial | srcas.ac.in

dailynews@srcas.ac.in

April 2025


## IQAC & IIC - FDP
- 05.04.2025

The Internal Quality Assurance Cell, in association with the Institution Innovation Council, is organizing a Faculty Development Program for the faculty members. Dr. D. Mythily, Assistant Professor in MBA, and Ms. K. Gowri, Assistant Professor in B.Sc. CS with CS, conducted a session on Innovation and Entrepreneurship.











## IQAC - Peer Teaching & Learning Session-II








The Internal Quality Assurance Cell is organizing Peer Learning and Teaching Sessions for the faculty members. On 12.04.2025 Mr. T. Pradeep, Assistant Professor of BCA handled a session on Microsoft Azure AI Engineering Associate.

## IKS - Session
- 09.04.2025











A session on "Indian Knowledge System: A Philosophical Appraisal" was organized by the IQAC & the Center of Indian Knowledge System (IKS). Dr. B.L. Shivakumar, Principal & Secretary, delivered the presidential address, and the IKS coordinators welcomed the gathering. The IKS activity book, Bharathiya Gnana Parampara: The Indian Knowledge Legacy at SRCAS, was released. Chief Guest Dr. Sreekala M. Nair, Director of the International School of Sree Sankaracharya Studies, appreciated the institution's efforts to promote India's value systems and heritage. She emphasized that philosophy is India's common intellectual language and urged academic institutions to revive the nation's long-forgotten knowledge systems.

## CSDA - Student Achievement
- 05.04.2025

Arawind, Aswin, and Danish of III year CSDA secured second place in a two-day Hackathon conducted by Coimbatore Institute of Technology.



# Events @ SRCAS

## IQAC - Peer Teaching & Learning Session-III










The Internal Quality Assurance Cell is organizing Peer Learning and Teaching Sessions for the faculty members. On 16.04.2025 the Academic Leadership Program was conducted by Dr.N.Sumathi, Associate Professor & Head of Information Technology and Dr.R.Geetha, Associate Professor & Head of BCom CA

## IQAC - Peer Teaching & Learning Session-IV

The Internal Quality Assurance Cell is organizing Peer Learning and Teaching Sessions for the faculty members. On 17.04.2025 Dr. G. Sivasubramanian Librarian & Head handled a session on Tips for Enhancing Publications










## IQAC - Peer Teaching & Learning Session-V

The Internal Quality Assurance Cell is organizing Peer Learning and Teaching Sessions for the faculty members. On 21.04.2025, Dr. N. Premanand, Professor & Director MBA handled a session on Becoming Better Teachers.







## SRCAS Alumni Association / SNR Sons College Alumni Association

-21.04.2025



Our MCA department alumni from the 2003–2005 batch, Mr. Ramesh Saruvamalai, Founder and CEO of Qwick Solution Private Limited, and Mr. Sathish Kumar Periyasamy, Founder and CEO of AINTIRAM Web Tech, Coimbatore, visited our college and had a pleasant interaction with our Principal and Secretary, Dr. B. L. Shivakumar.

# Events @ SRCAS

## CS&DA - VAC
28 - 30.04.2025














The Department of B.Sc. Computer Science (Data Analytics) conducted a Value-Added Course on the topic 'Cyber Security' from 28.04.2025 to 30.04.2025.

## DCFS - VAC
- 25.04.2025


The Department of B.Sc. Computer Science (Digital & Cyber Forensic Science) conducted a Value-Added Course on 'Yoga' on April 25, 2025.















**Pulse Editorial Nexus**
Dr.D.Sampath Kumar | Ms.V.C.Helen Swarna
Mr.N.Sri Sakthi Muthuvel

**News Desk**
Dr.T.Sathiyaseelan

## SRCAS News Room

மக்கள் குரல்



# ராமகிருஷ்ணா கல்லூரியில் இந்திய அறிவியல் பாரம்பரியம் குறித்த கருத்தரங்கம்

கோவை, ஏப். 9—

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய அறிவியல் பாரம்பரியம் குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "இந்திய அறிவியல் முறைமை: ஒரு தத்துவபார்வை" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கத்தை கல்லூரியின் உள்ளகத்தர உறுதிக்குழுவும் (ஐக்யூஏசி), இந்திய அறிவுமையமும் (ஐகேஎஸ்) இணைந்து ஏற்பாடு செய்தன.

இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரத்தை கொண்டாடும் நோக்குடன் கல்லூரியின் முதல்வரும் செயலருமான பி.எல்.சிவகுமார் தலைமை உரை வழங்கினார். ஐகேஎஸ் ஒருங்கிணைப்பாளர்கள் வரவேற்பு வழங்கினர்.

கருத்தரங்கில், "பாரதிய ஞானபரம்பரை: ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய அறிவு மரபு" என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட செயல்பாட்டு புத்தகம் வெளியிடப்பட்டது.

சிறப்பு விருந்தினராக வருகை தந்த ஸ்ரீசங்கராச்சாரியர் சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் ஸ்ரீசங்கராச்சாரியர் ஆய்வுகளுக்கான சர்வதேசப்பள்ளி இயக்குனரும், கோவையைச் சேர்ந்தவருமான டாக்டர் ஸ்ரீகலா எம்.நாயர், நாட்டின் மதிப்பீடு முறைமைகள், பாரம்பரியம் மற்றும் மரபை பரப்பும் இந்தக் கல்வி நிறுவனத்தின் நடவடிக்கைகளை பாராட்டினார்.

கருத்தரங்கின் போது டாக்டர் ஸ்ரீகலா கூறியதாவது: "இந்தியா எப்போதும் ஞானத்தை நாடும் தேசமாக இருந்தது. இந்தியர்கள் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய பொதுப்பேச்சு மொழிதத்துவமே. ஆனால், இப்போது மக்கள் இந்தியாவின் தத்துவத்தையும், அதன் வரலாற்றையும் மறந்துவிட்டனர். எனவே கல்வி நிறுவனங்கள் இந்தியாவின் இழக்கப்பட்ட அறிவியலை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்."

இந்த கருத்தரங்கு பார்வையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இறுதியில் ஐக்யூஏசி குழுவினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

### கல்லூரிகளுக்கு முக்கியத்துவம் தாருங்கள்



ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி பேராசிரியர் சந்தான கிருஷ்ணன் பேசியதாவது: தமிழகத்தில் 55 பல்கலைகள், 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்லூரிகள் உள்ளன. இந்தாண்டு பிளஸ் 2 தேர்வை எட்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர் எழுதியுள்ளனர். இத்தனை பேரும் படித்து வேலை வாய்ப்பை தேடுவர்.

தரமான கல்லூரி, எதிர்காலத்தில் தேவையுள்ள படிப்புகளை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. படிக்கும் போதே அப்படிப்புகள் சார்ந்த திறன் அமைப்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

டெக்னிக்கல், சாப்ட், மேனேஜ்மெண்ட், ஆராய்ச்சி, சமூகத் தொடர்பு உள்ளிட்ட திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அனைத்து படிப்புகளும் திறமையை வளர்க்க கூடிய படிப்புகள் தான். எந்த படிப்பையும் புரிந்து படித்தால் எதிர்காலம் உள்ளது.

### பில்டிங் 'ஸ்ட்ராங்' ஆக இருக்க 'பேஸ்மென்ட்' தானே பிரதானம்

'கலை அறிவியல் படிப்புகளில் வாய்ப்புகள்' எனும் தலைப்பில், கோவை எஸ்.என்.ஆர்., கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர் ஜெயபால் பேசியதாவது:


ஜெயபால்

உயர்கல்வியை தேடும் உங்களுக்கு கற்றல், கேட்டல் திறன், சொல்லறிவு முக்கியம். அழகாக, தெளிவாக, வேகமாக எழுதுவதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். எந்தப் பட்டப்படிப்பு, பாடப்பிரிவை தேர்வு செய்தாலும், கணினி அறிவு கட்டாயம். 'ஆர்ட்ஸ்' தானே என அலட்சியமாக இருக்கக் கூடாது. முதுகலை படிப்பு, வேலைவாய்ப்புக்கு செல்லும் போது, கணினி தெரிந்தவருக்கே முன்னுரிமை தரப்படும்.

அமெரிக்காவில், மொழி பெயர்ப்பாளருக்கு கூட வாய்ப்புகள் நிறைய உள்ளன. அதில் கூட ஆர்வம் செலுத்தி, பலமொழிகளை கற்று, வேலைவாய்ப்பு தேடலாம். என்ன படிக்க வேண்டும் என்பதை விட எப்படி படிக்க வேண்டும் என்பதே முக்கியம். 'படிச்சிட்டு பார்த்துக்கலாம்' என்ற மனநிலை இருக்கக் கூடாது. அஸ்திவாரம் போடாமல் கட்டடம் கட்டக் கூடாது. பில்டிங் 'ஸ்ட்ராங்' ஆக, உயர்கல்வியை தேர்வு செய்யும் போது, தொலை நோக்கு பார்வை வேண்டும்.

ஆராய்ச்சி படிப்புக்கு மேலை நாடுகளில் வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர்மானியுங்கள்; அதன் பின் படிப்பை தேர்வு செய்யுங்கள். அதிக புத்தகங்களை படியுங்கள். ஆசிரியராக வேண்டும் என எண்ணினால், பி.எட்., எம்.எட்., பிஎச்.டி., கட்டாயம். பேராசிரியராக வேண்டுமென்றால், தகுதித்தேர்வுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

மொபைல்போனில் காட்டும் ஆர்வத்தை, படிப்பில் காட்டுங்கள்; பாடப்பிரிவை தேர்வு செய்வதில் காட்டுங்கள். ஆட்டுமந்தையாக, பத்தோடு பதினொன்றாக பயணிக்கக்கூடாது. உங்களை தேடி வாய்ப்பு வரும் வகையில் திறமையானவர்களாக மாறுங்கள். கல்லூரிகளுக்கு நேரில் சென்று பார்த்து, தேர்வு செய்யுங்கள்.

உயர்கல்வி படிக்கும் போது பொறுப்பு கூடுகிறது என்பதை உணருங்கள். நன்றாக உழையுங்கள். ஜெயித்து விடுவீர்கள்.